# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆவணி 12 | வியாழக்கிழமை 28.08.2025 | கதிர் 299









## தமிழ் மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா. செல்கின்றது "நீதியின் ஓலம்"

யாழ்ப்பாணம், ஓக. 28

ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் "நீதியின் ஓலம்" ஐ.நா.வுக்குச் செல்லவுள்ளது என்று தாயகச் செயலணி அமைப்பின் வடக்குக்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து "நீதியின் ஓலம்" கையொப்பப் போராட்டம் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு, கிழக்கில் ஆரம்பமானது.

இந்தப் போரட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படுகொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணம் - செம்மணியில் ஆரம்பமாகி இன்று 7

# சந்நிதியில் இன்று ஒரே நேரத்தில் 111 ஜோடிகளுக்குத் திருமணம்!

## சிங்கப்பூர் தம்பதியினர் செய்து வைத்தனர்







வடமராட்சி, ஓக. 28

யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் முதன்முறையாக ஒரே நேரத்தில் இன்று 111 ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட திருமணம் செய்யாத மற்றும் பதிவுத் திருமணம் செய்து தாலி கட்டாதவர்கள் உள்ளிட்ட 111 ஜோடிகளுக்குச் சிங்கப்பூரைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட துரை தம்பதியினரால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. 7

## துப்பாக்கிச்சூடுகள் அதிகரிப்பு



கொழும்பு, ஓக. 28

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 89 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் போது 48 பேர் உயிரிழந்துள்ளதுடன் 7

## இன்று அதிகாலை தொடக்கம் இ.போ.சவினர் வேலைநிறுத்தம்






யாழ்ப்பாணம், ஓக. 28

தனியார் பஸ்களுடன் கூட்டுநேரஅட்டவணையில் பஸ்களை இயக்கும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கை 7

## இ.போ.ச. பஸ் மோதி விபத்து! மாநகர சபை ஊழியர் சாவு!!



கல்முனை, ஓக. 28

கல்முனை மாநகர சபையில் காவலாளியாகக் கடமையாற்றும் டேவிட் பாஸ்கரன் (வயது 56) வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். 7

## ரணிலைச் சந்தித்தாரா பிரதமர் ஹரிணி?

### கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களை சோதனை செய்ய சி.ஐ.டிக்கு மாளிகாகந்த நீதிவான் அனுமதி



கொழும்பு, ஓக. 28

பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்காகக் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்குச் சென்றார் என்று சமூக ஊடகங்களில் பரவும் பதிவுகள் தொடர்பான விசாரணைகளுக்காகக் கொழும்பு தேசிய 7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



## இலங்கை போக்குவரத்து சபை பேருந்து பணியாளர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஓக .28

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை போக்குவரத்து சபையின் பல தொழிற்சங்கங்கள் நேற்று (27) நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

தனியார் பேருந்துகளுடன் கூட்டு நேர அட்டவணையில் பேருந்துகளை இயக்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ,லங்கை போக்குவரத்து சபையின் ஐக்கிய சேவை சங்கத்தின் தலைவர் நிரோஷன் சம்பத் பிரேமரத்ன தெரிவித்தார். அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டு நேர அட்டவணையில் பல சிக்கல்கள் இருப்பதாக ,லங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அனைத்து தரப்பினரின் கருத்துக்களின் அடிப்படையிலேயே கூட்டு நேர அட்டவணை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ. சந்திரபால தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதால், வேலைநிறுத்தம் நியாயமற்றது என்று போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குமார குணசேன குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையுடன் ,ணைந்த தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை செயல்படுத்துவதாக அறிவித்த போதிலும், நேற்று நள்ளிரவு முதல் கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் பேருந்துகள் வழக்கம் போல் ,யங்குவதாக “அத தெரண” செய்தியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# உற்பத்திக் கைத்தொழிற்துறையை வலுப்படுத்த அரசாங்கத்தின் ஆதரவு



கொழும்பு, ஓக .28

பீங்கான் கைத்தொழிற் துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற்காக உள்ளூர் வர்த்தகர்களுடன் நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று (27) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடை பெற்றது.

ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும் உள்ளூர் வர்த்தகர்களைப் பாதுகாக்கவும் நாட்டில் உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் உற்பத்தித் துறையுடன் தொடர்புடைய தற்போதைய பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

டையில், குளியலறை உதிரிப்பாகங்கள் மற்றும் சுகாதாரப்பாதுகாப்புப் பொருட்கள் உள்ளிட்ட பீங்கான் பொருட்கள் குறித்து இதன் போது தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டது. சந்தையில் தற்போது கிடைக்கும் மேற்படி பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இந்த நாட்டின் நுகர்வோருக்கு தரமான மற்றும் உயர்தர பீங்கான் பொருட்களை நியாயமான விலையில் வழங்க அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மூலப்பொருட்களை பெறுவது உட்பட பீங்கான் கைத்தொழிற்துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, பீங்கான் கைத்தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறை வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதி துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மிகுதி 400 மில்லியன் ரூபா எங்கே?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு அபிவிருத்திக்காக 400 மில்லியன் ஒதுக்கினார் ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா 800 மில்லியன் வழங்கப்பட்டதாக தெரிவிக்கின்றார். எனவே மிகுதி 400 மில்லியன் ரூபா எங்கே? என்ன நடந்தது? இந்த மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, ஜனாதிபதி விசாரணை குழு ஒன்றை நியமித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மட்டு. மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் வர்த்தகருமான அன்ரனிசில் ராஜ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் என் மீது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அப்பட்டமான பொய் குற்றச்சாட்டு ஒன்றை வைத்திருந்தார். எனவே அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் என் மீது சுமத்தப்பட்ட பொய் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என இந்த ஊடக சந்திப்பு ஏற்படுத்தினேன்.

கிழக்கு மாகாணத்தில் தேசத்துக்கு மகுடம் என்ற திட்டத்தின் கீழ் யு.என்.டி.பி நிறுவனத்தால் மீனவர்களுக்காக 9 மண்ணெண்ணெய் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டது. இருந்த போதும் தற்போது களுவங்கேணி, பாலமீன்மடு ஆகிய இரண்டு நிலையங்கள் மாத்திரம் இயங்கி வருகின்றது.

ஏனைய அனைத்து மண்ணெண்ணெய் நிரப்பு நிலையங்கள் துருப்பிடித்து இயங்க முடியாது. பாலடைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த கடற்தொழில் நீரியல் வளத்துறைக்கு சொந்தமான இந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீனவர் சங்கங்களிடம் இருந்து நான் 5 வருட குத்தகை அடிப்படையில் சட்ட ரீதியாக பெற்றுக் கொண்டேன்.

அதேவேளை 2021 பாராளுமன்றத்தில் அப்போது கடல் தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் களுவங்கேணியில் மண்ணெண்ணைய் நிரப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது. இதை மீனவர்களுடைய பயனுக்காக திறக்கமுடியாதா என ஒரு கேள்வி இரா.சாணக்கியன் எழுப்பியிருந்தார். அது தொடர்பாக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் அதை இயக்க யாரும் முன்வராததால் அதை கப்பல் போக்குவரத்து திணைக்களத்துக்கு வழங்கி அதை இயக்க வைக்குமாறு கூறியிருந்தார்.

இதனை ஊடகவாயிலாக அறிந்த நான், சம்மந்தப்பட்ட மீனவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அதனை திருத்தி அமைத்து இயக்குவேன் என கூறி 5 வருட குத்தகைக்கு பெற்றுக் கொண்டேன். அதில் தற்போது 4 வருடம் முடிவுற்றுள்ளதுடன் இன்னும் ஒருவருடம் இருக்கின்றது.



இந்த நிலையில் இரா.சாணக்கியன் டக்ளஸின் செல்வாக்கினால் எனக்கு வழங்கப்பட்டதாக பொய் குற்றச்சாட்டை என் மீது சுமத்தியுள்ளார்.

இரா.சாணக்கியனின் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் கல்லாற்றில் தேசத்துக்கு மகுடத்தின் திட்டத்தில் வந்த எரிபொருள் நிரப்பு நிலையம் இன்று வரை திறக்க முடியாது துருப்பிடித்து கட்டிடத்தின் கதவுகள் கழற்றப்பட்டு பாழடைந்துள்ளதை அவர் திறக்க வைத்திருக்கலாம் அதை செய்ய முடியாத இவர் தற்போது இயங்கி கொண்டிருக்கும் மீனவர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும்.

இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் எவ்வாறு ஏனையவை இயங்காது இருப்பது போல இயங்காது தடுப்பதற்கு அல்லது அவருடைய பினாமிகளுக்கு அதை கைப்பற்றி வழங்குவதற்கு அரச அதிகாரிகளை தவறான முறையில் வழிநடத்தி பாரிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்திக்காக அவருக்கு 400 மில்லியன் ரூபா பணத்தை ஒதுக்கினார் அதில் எருவில் கோடைமடு குளத்தில் பதிவு செய்யப்படாத விளையாட்டு மைதானத்துக்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முடிவுற்றதாக காட்டி பணத்தை பெற்றுள்ளனர்.

இதேபோன்று ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் இதுவரை பூர்த்திசெய்யப்படாமல் பூரணப்படுத்தி உள்ளது என நிதி வழங்கப்பட்டது. இதை அறிந்து நான் இரா.சாணக்கியனுக்கு மற்றவர்கள் போல செம்பு தூக்கி மௌனிகளாக கைகட்டி பார்த்துக் கொண்டிருக்க முடியாது இது மக்களின் வரிப்பணம் இதனை வீண் விரயம் செய்ய விடமுடியாது.

நான் இந்த நாட்டின் ஒரு குடிமகன் என்ற ரீதியில் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமை எனவே தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மக்களுடைய வரிப்பணம் வீணடிக்கப்பட்டு பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தேர்தல் திணைக்களத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தேன்.

இதனால் அவர் என்னுடன் காழ்ப்புணர்ச்சி கொள்வதற்கான காரணமாக என்னை பழிவாங்கும் நோக்கத்துடன் என் மீது பொய் குற்றச்சாட்டு சுமத்தி திறக்காமல் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறக்க முடியாது. திறந்திருப்பதை மூடுவதற்கு முயற்சி செய்து என்னை பழி வாங்குகிறார் என எனக்கு நன்றாக தெரியும். இது தொடர்பாக கடற்தொழில் அமைச்சர் மற்றும் பணிப்பாளருக்கு எழுத்து மூல அறிக்கை சமர்ப்பித்துள்ளேன்.

எனவே உங்களுடைய இந்த பூச்சாண்டி, அடாவடி அரசியலை விட்டுவிட்டு தமிழரசு கட்சி கடந்த காலத்தில் எவ்வாறு இருந்தது அவ்வாறு இருக்க வேண்டும் என்பது எங்களது நோக்கம். அதைவிடுத்து ஆயுத குழுக்கள் போன்று அடாவடியில் ஈடுபட்டு வருகிறார்கள் இதனை வன்மையாக கண்டிக்கின்றேன். அதேவேளை கடந்த காலத்தில் ஆயுத குழுக்கள் எவ்வாறு இருந்ததே அவ்வாறு தமிழரசு கட்சியை இன்று ஆயுத குழு பாணியில் அழைத்துச் செல்கிறீர்கள்? என்ற சந்தேகம் எழுகின்றது.

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக இரா. சாணக்கியனுக்கு 400 மில்லியன் ரூபா ரணில் ஒதுக்கியதாக மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம் எழுத்து மூலம் அறிக்கை வந்துள்ளது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் ரணில் 800 மில்லியன் ரூபாவை இரா.சாணக்கியனுக்கு வழங்கியுள்ளதாக அதற்கான ஆதாரம் உள்ளதாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே மிகுதி 400 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது? எங்கே அந்த பணம்?

அதேவேளை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாவில் 3 கோடியே 99 இலட்சம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தகல் அறியும் சட்டத்தில் தெரிவிக்கின்றது. எது எவ்வாறக இருந்தாலும் மாவட்டத்தில் நாளை கஞ்சி குடிப்பதற்கு நமக்கு கஞ்சிக்காவது வழி கிடைக்குமா என ஆயிரக்கணக்கான பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஏங்கி தவிக்கின்றனர்.

ஆனால் அபிவிருத்திக்கு ஒதுக்கிய பணத்தை அவர்களின் வாழ்வாதாரத்துக்காக அல்லது அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்தாது தேவையற்ற முறையில் முறையற்ற விதத்தில் இந்த பணத்தை உங்கள் ஊரிலே மாத்திரம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செய்துள்ளார்.

அபிவிருத்திக்கு வந்த பணத்தில் 3 கோடியே 99 இலட்சம் திருப்பி அனுப்பினால் எந்த அரசாங்கமும் மாவட்டத்துக்கு எந்த நிதியும் ஒதுக்காது அதை சுட்டிக் காட்டினால் நாங்கள் குற்றவாளியா? அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை சரியாக பயன்படுத்த தெரியாது விட்ட தவறை சுட்டிக்காட்டிய என்னை பழிதீர்க்க எனது குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு ஒருவருக்கு வழங்க பகிரங்க கேள்வி மனு செய்யுமாறு அரச அதிகாரிகளை அச்சுறுத்தி தவறான முறையில் வழிநடத்துகிறார்.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு தமிழரசு கட்சியின் சரியான பாதையில் செல்லுங்கள் ஆயுத குழுக்கள் போல செயல்பட்டு தமிழரசு கட்சி அகால பாதாளத்துக்கு கொண்டு செல்ல வேண்டாம் என தெரிவித்தார். (ஐ)

# “உயிர்களைக் காப்பாற்ற சவாரி”






கொழும்பு, ஓக .28

இலங்கை முழுவதும் தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைத்து மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒரு தனித்துவமான பயணத்தை 25 க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுனர்கள் “உயிர்களைக் காப்பாற்ற சவாரி” எனும் தொனிப்பொருளில் மேற்கொள்ளவுள்ளனர்.

இது 13 நாள் பயணம் அ/ஹங்கல்லவில் ஆகஸ்ட் 29ஆம் திகதி ஆரம்பமாகும். 13 நகரங்கள் வழியாக சென்று 1333 கிலோ மீற்றர்களை கடப்பார்கள்.

செப்டம்பர் 10 ஆம் திகதி உலக தற்கொலை தடுப்பு தினத்தன்று இந்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிறைவடையும்

இந்த அணிவகுப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, எந்த ஒரு தொலைபேசி நெட்வொர்க் மூலமாகவும் கிடைக்கும் இலவச, ரகசியமான, தொலைபேசி நெருக்கடி ஆதரவு சேவையான ஊஊஊடனைநெ 1333 பற்றி இலங்கை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

பயிற்சி பெற்ற நெருக்கடி ஆலோசகர்களால் பணியாற்றப்படும் ஊஊஊடனைநெ 1333 தொலைபேசி சேவை, சர்வதேச லைஃப்லைன் அவுஸ்திரேலியா மாதிரியைப் பின்பற்றுகிறது மற்றும் மன அழுத்தம், பதற்றம் அல்லது தற்கொலை எண்ணங்களை அனுபவிக்கும் மக்களுக்கு உயர்தர உணர்ச்சி ஆதரவை வழங்குகிறது.

இலங்கையில் தற்கொலை செய்து கொள்ளும் 8 முதல் 10 பேரில் ஒவ்வொரு நாளும் சுமார் 30 பேர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

“உயிர்களைக் காப்பாற்ற சவாரி” நிகழ்ச்சியின் 13 நாட்களில், ஊஊஊடனைநெ குழு, சமூகக் கூட்டங்களை நடத்த உள்ளது. மனச்சோர்வை தூண்டும் காரணிகளை அடையாளம் காண்பது, துயரத்தை அங்கீகரிப்பது, மனச்சோர்வின் அறிகுறிகளை அங்கீகரிப்பது, தற்கொலை பற்றிய கட்டுக்கதைகளை அகற்றுவது மற்றும் பயம் அல்லது வெட்கம் இல்லாமல் உதவி பெற மக்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகின்றன.

“ஒன்றாக, விழிப்புணர்வை ஏற்படுத்துவோம், மாற்றத்திற்காகப் பயணிப்போம் - மிக முக்கியமாக, உயிர்களைக் காப்பாற்றுவதற்காக பயணிப்போம்”.(ஐ)

# தமிழக மக்களின் உரிமை, நலன், வளர்ச்சி ஆகியவற்றிற்காக எப்போதும் உறுதியான குரலாக இருந்து வருகிறார் முதல்வர்: செல்வப்பெருந்தகை!



தமிழக மக்களின் உரிமை, நலன், வளர்ச்சி ஆகியவற்றிற்காக எப்போதும் உறுதியான குரலாக இருந்து வருகிறார் முதல்வர் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்ததாவது திராவிட முன்னேற்றக்கழகத்தின்தலைவராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று இன்று எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாகவும், எனது தனிப்பட்ட சார்பாகவும், மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சமூக நீதி, சமத்துவம், அன்பு, மனிதநேயம் ஆகிய தத்துவங்களை வழிகாட்டியாகக் கொண்டு, தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் கோட்பாடுகளை மக்கள் வாழ்வில் செயலாக்கி வரும் அரிய தலைமைத்துவம் கொண்டவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்.

கடந்த ஆண்டுகளில் கட்சியின் ஒற்றுமையையும் வலிமையையும் வளர்த்ததோடு மட்டுமல்லாது, தமிழக அரசியலில் மக்கள் நம்பிக்கையை பலமடங்கு உயர்த்தியுள்ளார். தமிழக மக்களின் உரிமை, நலன், வளர்ச்சி ஆகியவற்றிற்காக எப்போதும் உறுதியான குரலாக இருந்து வருகிறார். இந்நாளில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக வெற்றிகரமாக எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாகவும், எனது இதயப்பூர்வமான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பதிவிட்டுள்ளார். (ஐ)

# சத்தீஸ்கர் மழை வெள்ளத்தில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பலி





திருப்பத்தூரை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் 4 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. சிவில் இன்ஜினியரான ராஜேஷ்குமார் 15 ஆண்டுகளாக சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் பணியாற்றி வந்தார் மனைவி, 2 பெண் குழந்தைகளுடன் வசித்து வந்த ராஜேஷ்குமார் சொந்த ஊர் திரும்பும் போது, அவர்கள் பயணித்த கார் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது

சத்தீஸ்கரில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்கு பஸ்தார், பிஜாப்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்டங்களில் நேற்று கனமழை பெய்தது. இதனைத்தொடர்ந்து பல நதிகள் நிரம்பி வழிந்து, தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. சாலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால் போக்குவரத்து அங்கு பாதிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்ததால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மாநில அரசு மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை படையினர் இணைந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து வருகின்றனர்.

இந்த சூழலில் பஸ்தார் மாவட்டத்தில் கங்கர் பள்ளத்தாக்கு தேசிய பூங்கா பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய கால்வாயை ஒரு கார் கடக்க முயன்றது. அப்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் காருடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். இதில் அந்த தம்பதியினர், இரண்டு மகள்களுடன் இறந்தனர்.

விசாரணையில் அந்த காரில் பயணித்தது தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்து உள்ளது. இறந்தவர்கள் ராஜேஷ்குமார் (வயது 43), அவரது மனைவி பவித்ரா(40), அவர்களது 2 மகள்கள் சவுஜன்யா (7) மற்றும் சவுமியா (4) என்றும் அடையாளம் காணப்பட்டு உள்ளது.

ராஜேஷ்குமார், ராய்ப்பூரில் ஒப்பந்ததாரராக பணியாற்றி வந்தார். அவர் குடும்பத்தினருடன் பஸ்தாருக்கு காரில் சுற்றுலா சென்றிருந்தார். நேற்று முன்தினம் கால்வாயில் வெள்ளத்தை கடக்க முயன்றபோது அவர்களது காரை வெள்ளம் இழுத்துச்சென்றது. அன்று மாலையில் கால்வாயில் நீர்மட்டம் குறைந்தபிறகு 4 பேரின் உடல்களும் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு பிரேத பரிசோதனை முடிந்து இரண்டு ஆம்புலன்ஸ்கள் மூலம் திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள பாரண்டப்பள்ளி கிராமத்திற்கு 4 பேரின் உடல்களை எடுத்து வரும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளம் காரணமாக திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்த சம்பவம் திருப்பத்தூர் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள் ளது. (ஐ)



# செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்கேற்க பிரியங்கா காந்திக்கு அழைப்பு!


வாக்குத் திருட்டை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையிலும், திருநெல்வேலியில் வருகிற செப்டம்பர் 7ம் தேதி ஒரு மாபெரும் விளக்க மாநாடு நடைபெறவுள்ளது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை இந்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த மாநாட்டில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பங்கேற்க வாய்ப்புள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அரசியலமைப்பைக் காக்கவும், நமது வாக்குரிமையைப் பாதுகாக்கவும் அனைவரும் இந்த மாநாட்டில் திரள வேண்டும் என்று செல்வப்பெருந்தகை அழைப்பு விடுத்துள்ளார். ஏற்கனவே, ராகுல் காந்தி, இதேபோன்ற ஒரு 'வாக்குத் திருட்டுக்கு' எதிரான பேரணியை பீகாரில் நடத்தி வருகிறார். இந்த மாநாடு, காங்கிரஸ் கட்சியின் தேசிய அளவிலான போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுகிறது. பிரியங்கா காந்தியின் பங்கேற்பு, தென் மாவட்டங்களில் காங்கிரஸ் கட்சிக்கு மேலும் பலம் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# AI தொழில்நுட்பத்தால், இளம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகள் 13% குறைந்தது!




AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த தொடங்கிய துறைகளில், 22-25 வயதுடையவர்களுக்கான வேலை வாய்ப்புகள் 13% வரை குறைந்துள்ளதாக ஸ்டான்ஃபோர்டு பல்கலை.யின் ஆய்வில் தெரியவந்துள்ளத. சாஃப்ட்வேர் டெவலப்பர் துறையில் மட்டும், 2022ம் ஆண்டு முதல் தொடக்க நிலை வேலை வாய்ப்புகளில் 20% குறைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.



# மும்பையில் விஜய் நகர் பகுதியில் நான்கு மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழப்பு

மும்பையில் விஜய் நகர் பகுதியில் நான்கு மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்தனர். 2 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் எட்டு முதல் பத்து பேர் சிக்கியுள்ளனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன .(ஐ)



# பக்தியா? பயமா?

-சிவ சங்கரி


பண்டிகைகள் என்றாலே பெண்களுக்கு வழக்கத்தைவிட இரண்டு மடங்கு வேலை கொண்ட நாளாக அமைந்துவிடும். என் பள்ளிக் காலங்களில் விநாயகர் சதுர்த்தி இன்றைக்கு இருப்பது போல ஆர்ப்பாட்டமான பண்டிகையாக இருக்கவில்லை. சதுர்த்திக்கு முதல் நாள் வீட்டைச் சுத்தம் செய்வார்கள். தாத்தோவுடனோ அப்பாவுடனோ சென்று, களிமண் பிள்ளையாரை வாங்குவோம். எங்களைப் போல பலரும் குழந்தைகளோடு வந்துதான் பிள்ளையார் வாங்குவார்கள். சின்ன சின்ன சிலைகளில் குழந்தைகள் எதைக் கேட்கிறோமோ அதை வாங்கிவிடுவார்கள். அதைப் பத்திரமாகவும் பக்தியோடும் எடுத்துக்கொண்டு, தேங்காய், பழம், அவல், பொரி, கொழுக்கட்டை செய்வதற்குத் தேவையான அரிசி மாவு, வெல்லம், வாழைக் கன்று எல்லாவற்றையும் வாங்கிகொண்டு வீட்டுக்கு வருவோம். பிள்ளையாரை வைத்து, பிள்ளையாருக்கு இரண்டு புறமும் வாழைக் கன்றுகளை வைத்துவிடுவோம். மறுநாள் பிடிக் கொழுக்கட்டை, பூரணக் கொழுக்கட்டைகளை அம்மா செய்வார். பூரணம் தயாரானதுமே என் அண்ணன் சாப்பிடக் கேட்பான். சாமிக்குப் படைக்காமல் சாப்பிடக் கூடாது என்பார் எங்கள் அப்பத்தா. ஆனால், எங்கள் தாத்தாவோ, குழந்தைகள் தெய்வத்துக்குச் சமம். அவர்களுக்குக் கொடுப்பதால் ஒன்றும் ஆகிவிடாது என்பார். அதனால் எல்லாருக்கும் பூரணம் கிடைக்கும்.

கொழுக்கட்டை, அவல், பொரி, பழம் எல்லாம் வைத்துப் பூஜை செய்வார்கள். தாத்தா தேங்காய் உடைத்து, சூடம் ஏற்றி, தீபாராதனைக் காட்டுவார். அதன் பிறகு கொழுக்கட்டைகளைச் சாப்பிடக் கொடுப்பார்கள். அந்தக் காலத்தில் நொறுக்குத் தீனிகள் அதிகம் இல்லை என்பதால், கொழுக்கட்டைகளை எல்லாரும் விரும்பிச் சாப்பிடுவோம்.

மறுநாள் பிள்ளையார் சிலைகளைக் கொண்டு போய் நீர்நிலைகளில் கரைத்துவிட்டு வருவார்கள். பிள்ளையாரை ஏன் கரைக்கிறார்கள் என்று தாத்தாவிடம் கேட்டேன். ’கண்மாய், ஊரணி போன்ற நீர்நிலைகளில் பங்குனி, சித்திரை மாதங்களில் தண்ணீர் வற்றத் தொடங்கும். அப்போது மையப் பகுதியில் இருக்கும் களிமண்ணை எடுத்துக்கொண்டு வருவார்கள். அவர்கள் களிமண் எடுப்பதால், நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு, ஆழப்படுத்தப்படும். சாமி கும்பிட்ட பிறகு பிள்ளையார் சிலைகளை நீர்நிலைகளை ஒட்டியுள்ள கரைகளின் மீது கரைக்கும்போது, கரை பலமாகும். மண்பாண்டம் செய்பவர்களுக்கும் வருமானம் கிடைக்கும்’ என்றார். அந்த நாள் விநாயகர் சதுர்த்தியில் ஆர்ப்பாட்டமும் இல்லை, ஆடம்பரமும் இல்லை. காதைப் பதம் பார்க்கும் ஸ்பீக்கர்கள் இல்லை. விநாயகருக்கு வண்ணச் சாயம் ஏற்றுவதும் இல்லை. யாருக்கும் எந்தத் தொந்தரவும் இல்லாமல், மகிழ்ச்சி ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட பண்டிகையாக அப்போது இது இருந்தது.

இன்றோ ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸில் பிரம்மாண்டமான விநாயகர் சிலைகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றின் மீது ரசாயனக் கலவைகளால் செய்யப்பட்ட வர்ணங்கள் பூசப்படுகின்றன. மதவாதத்தைத் தூண்டிவிடும் நோக்கோடு சில இந்துத்வ அமைப்புகள் ஒவ்வோர் ஊரிலும் ஆங்காங்கே சிலைகளை நிறுத்திவிடுகிறார்கள். அந்தந்தப் பகுதி மக்கள் சிலைகளுக்குப் பூஜை செய்து, கொண்டாடுகிறார்கள். மூன்று முதல் பத்து நாட்கள் வரை பூஜைகள் செய்யப்படுகின்றன. பிறகு அந்தச் சிலைகளைப் பெரிய பெரிய வண்டிகளில் ஏற்றி, ஊர்வலமாக எடுத்துச் சென்று, நீர்நிலைகளுக்குக் கொண்டு செல்கிறார்கள். பெரிய சிலைகளை அப்படியே போட்டால் கரையாது என்பதால் கைகள், கால்கள், தலை எனத் தனித்தனியாக உடைத்து வீசுவதைப் பார்க்கும்போது இவர்களின் பக்தியே கேள்விக்குறியாகிவிடுகிறது. ரசாயனங்கள் நீர்நிலைகளில் கலப்பதால் நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

பக்தி என்பது தனிப்பட்ட விஷயம். அந்தப் பக்தியை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இவர்கள் செய்யும் ஒவ்வோரு செயலும் இயற்கைக்குச் செய்யும் கேடு. நீர்நிலைகளை மாசுபடுத்தாமல், சுற்றுச்சூழலைக் கெடுக்காமல், பிறருக்கு அச்சத்தைக் கொடுக்காமல் ஒரு விழாவைக் கொண்டாடுவதில்தானே உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது? பக்தி என்கிற பெயரில் பரப்பப்படும் வெறுப்புணர்வும் மதவாதமும் பண்டிகையை அச்சத்துடனே பார்க்க வைக்கிறது.






# வியட்நாம், தாய்லாந்தில் கனமழை, வெள்ளம்: 8 பேர் பலி 35 பேர் மாயம்



சீனாவின் தெற்கில் உள்ள சான்யா நகரை கடந்த வாரம் தாக்கிய கஜிகி என்ற சக்தி வாய்ந்த வெப்ப மண்டல சூறாவளி தென்கிழக்கு ஆசிய நாடுகளை நோக்கி நகர்ந்தது. இதனால் வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் கனமழை பெய்து வருகிறது. மணிக்கு 117கிமீ வேகத்தில் காற்று வீசியதால் பல இடங்களில் மரங்கள், மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன. தலைநகர் ஹனோய் உள்பட பல முக்கிய நகரங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. வடகிழக்கு வியட்நாமில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் 20செமீ மழை பெய்தது. இதனால் அந்த பகுதியில் உள்ள ஆறுகள் நிரம்பி வழிவதால் ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வியட்நாமின் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மாயமாகி உள்ளார். 34 பேர் காயமடைந்துள்ளனர். இதேபோல் தாய்லாந்திலும் இரு தினங்களாக கனமழை பெய்து வருகிறது. தாய்லாந்தின் வடக்கு நகரமான சியாங் மாயின் பகுதியில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒருவர் பலியானார். ஒருவர் மாயமாகி உள்ளார். தாய்லாந்தின் வடக்கு மாகாணங்களில் திடீர் வெள்ளம், நிலச்சரிவுகளில் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன.(ஐ)

# அமெரிக்க பள்ளியில் துப்பாக்கிச்சூடு 3 பேர் பலி



அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணம் மின்னோபோலீஸ் நகரில் கத்தோலிக்க பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு விடுமுறைக்கு பிறகு நேற்று முதல் நாள் வகுப்புகள் தொடங்கின. இதையொட்டி பள்ளியில் சிறப்பு பிரார்த்தனை நடத்தப்பட்டது. மாணவர்கள் மனமுருகி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் மாணவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதில் 8, 10 வயதான 2 சிறுவகள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 17 பேர் படுகாயமடைந்தனர்.பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்திய 20 வயது வாலிபர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். (ஐ)

# பிக்சல், துருவா ஸ்பேஸ் இணைந்து 3 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவின



கலிபோர்னியாவில் உள்ள வாண்டன்பெர்க் விண்வெளித்தளத்தில்இருந்து 3 செயற்கைகோள்கள் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டன. செயற்கைக்கோள் படங்களை சேகரிக்கும் பிக்சல் நிறுவனம் மற்றும் செயற்கைக்கோள்களை உருவாக்கும் துருவா ஸ்பேஸ் ஆகிய இந்திய நிறுவனங்கள் விண்வெளித்துறையில் கூட்டாக இணைந்து செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த நிறுவனங்கள் நேற்று ஸ்பேஸ்எக்ஸின் பால்கன்-9 ராக்கெட்டில் 3 செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளன. பூமியை மிகவும்நெருக்கமாகவும், தெளிவாகவும் பார்க்கும் 6 ஹைப்பர்பெக்ட்ரல் செயற்கைக்கோள்களின் ஸ்டார்ட்-அப் தொகுப்பின் முதல் கட்டத்தை இவை நிறைவு செய்துள்ளன.

பெங்களூரை சேர்ந்த பிக்சல் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அவைஸ் அகமத் தனது எக்ஸ்தள பதிவில், “பிக்சல் இந்த ஆண்டு ஜனவரியில் 3 பயர்பிளை செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியது. எங்களது முந்தைய செயற்கைக்கோள்கள் எவை சாத்தியம் என்பதை காட்டின. இவை அடுத்து என்ன என்பதை காட்டுகின்றன. 6 பயர் பிளை செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தி வைத்திருக்கும்போது கிரகமே ஒரு உயிருள்ள ஆய்வகமாக மாறும்” என்றார். ஐதராபாத்தை தளமாக கொண்ட துருவா ஸ்பேஸ் நிறுவனம், ஆஸ்திரேலியாவை சேர்ந்த அகுலா டெக் மற்றும் எஸ்பர் செயற்கைக்கோள்களின் பேலோடுகளை சுமந்து செல்லும் அதன் முதல் வணிக எல்இஏபி-01 செயற்கைக்கோளை ஏவிகிறது. (ஐ)



# அணு ஆயுத போராக மாற இருந்த இந்தியா – பாக். சண்டையை நிறுத்தினேன்: 40வது முறையாக டிரம்ப் மீண்டும் பேச்சு

அணு ஆயுத போராக மாற இருந்த இந்தியா - பாக். சண்டையை நிறுத்தினேன் என 40வது முறையாக டிரம்ப் மீண்டும் பேசி உள்ளார். பஹல்காம் பயங்கரவாத தாக்குதலையடுத்து இந்தியா-பாகிஸ்தான் இடையே மோதல்ஏற்பட்டது. பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை வான்வழி தாக்குதல்நடத்தி தகர்த்தது. இதனால், பாகிஸ்தான், இந்தியாவின் எல்லையோர மாநிலங்களில் டிரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது.

இதனை இந்தியா தனது வான்பாதுகாப்பு அமைப்பு மூலம் வானிலேயே அழித்தது. பாகிஸ்தானுக்கு பதிலடியாக அந்த நாட்டின் விமானப்படை தளங்கள் மீது இந்திய ஏவுகணைகளை கொண்டு தாக்கியது. இந்தியா நடத்திய பதிலடியால் தாக்குப்பிடிக்க முடியாத பாகிஸ்தான் சண்டை நிறுத்தத்திற்கு கெஞ்சியது. இதையடுத்து, மூன்று நாட்களாக நீடித்த இந்த மோதல் முடிவுக்கு வந்தது.இந்த நிலையில், இந்தியா-பாகிஸ்தான் இடையேயான சண்டை நிறுத்தத்தை நானே நிறுத்தினேன் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறி வருகிறார்.

ஆனால், இந்தியா இதனை திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இருந்த போதிலும் டிரம்ப் தொடர்ச்சியாக நானே சண்டை நிறுத்தம் செய்ய வைத்ததாக கூறி வருகிறார். அந்த வகையில், 40வது முறையாக இந்தியா-பாக். இடையேயான சண்டையை நிறுத்தியதாக அமைச்சரவை கூட்டத்தில் அதிபர் டிரம்ப் பேசியுள்ளார். இந்தியா - பாக். போரில் 7 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. சண்டையை நிறுத்தாவிட்டால் உங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்யமாட்டேன் என கூறினேன். அதிக வரி விதிப்பேன் என கூறிய 5 மணி நேரத்துக்குள் சண்டை நின்றது. இவ்வாறு பேசி வருகிறார். (ஐ)






# இடைத்தேர்தலை புறக்கணித்த இம்ரான் கட்சி

பாகிஸ்தானில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியை சேர்ந்த தலைவர்கள் பலர் கடந்த 2023 மே9ம் தேதி கலவரங்களில் ஈடுபட்டதற்காக தண்டனை பெற்றனர். இதன் காரணமாக தேசிய மற்றும் பல மாகாண சட்டமன்றங்களில் பல இடங்கள் காலியானதாக அறிவிக்கப்பட்டது. காலியான இடங்களுக்கான இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த இடைத்தேர்தலை புறக்கணிப்பதற்கு இம்ரானின் கட்சி முடிவு செய்துள்ளது.

## இ.போ.சா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர் தனது இரவு நேரக் கடமையை முடித்துக் கொண்டு இன்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், மருதமுனை மக்கள் மண்டபம் முன்பாக நேர் எதிரே வந்த இ.போ.ச. பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானபோது அதே இடத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபையில் காவலாளியாக நிரந்தர நியமனம் பெற்ற டேவிட் பாஸ்கரன், சுமார் 24 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். கடமையில் பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு மிக்கவராகக் காணப்பட்ட இவர் கல்முனை மாநகர சபையின் சிறந்த ஊழியர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார்.

## இன்று அதிகாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்குவரத்துச் சபையின் பல தொழிற்சங்கங்கள் இன்று அதிகாலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

அதற்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், அனைத்து தரப்பினரின் கருத்துக்களின் அடிப்படையிலேயே கூட்டு நேர அட்டவணை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இணைந்த நேர அட்டவணை மூலம் அரசு, இலங்கை போக்குவரத்துச் சபையைக் கலைக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தொழிற்சங்க அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொழிற்சங்கங்கள் முன்வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதால், வேலைநிறுத்தம் நியாயமற்றது என்றும், அரசைச் சிரமப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அனைத்து போக்குவரத்து சபை சாரதிகளையும் கடமைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு செய்யத் தவறி தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்பவர்களை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களைச் சோதனை செய்வதற்கு மாளிகாகந்த நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதிவான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்றார் என்று சமூக ஊடகங்களில் பரவும் பதிவுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள், மாளிகாகந்த நீதிவானிடம் இன்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சி.சி.ரி.வி. கமராக்களைச் சோதனை செய்ய அனுமதி வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## தமிழ்மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட "நீதியின் ஓலம்" எனும் கையொப்பப் போராட்டம் இன்றுடன் நிறைவுக்கு வந்தது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கின் பல்வேறு பிரதேசங்களில் மக்களின் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தக் கையொப்பப் போராட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கு அதிகமானோர் கையொப்பமிட்டிருந்தனர்.

முன்பதாக கடந்த ஐந்து நாட்களாகத் தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கையொப்பப் போராட்டத்தி ஊடாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்தப் போராட்டம் வலியுறுத்துகின்றது." - என்றார்.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

50 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மாத்திரம் 7 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "குடு சலிந்து" என்பவரின் தரப்பினரால் "நிலங்க" என்பவரின் தரப்பினரை இலக்கு வைத்து இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சந்நிதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருமணத்தின் போது அரைப்பவுண் தாலி, கூறைச் சேலை மற்றும் இதர செலவுகளையும் குறித்த சிங்கப்பூர் தம்பதிகள் வழங்கி குருமார்களின் ஆசியுடன் விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று அனைத்து தம்பதியினரும் சுபமுகூர்த்த வேளையில் தாலி கட்டிக்கொண்டனர்.

திருமணத்துக்காக 111 தம்பதிகளையும் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ச.சுதர்சன், யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் ஆகியோர் மேற்கொண்டார்.

சிங்கப்பூர் தம்பதியினர் தமது மகளுக்குத் திருமணம் செய்ததையடுத்து இவ்வாறு ஏனையவர்களுக்கும் தமது சொந்த நிதியினூடாக திருமணம் செய்து வைக்க எண்ணிய உயரிய சிந்தனையை மணமக்கள் மனதார வாழ்த்தி நின்றனர்.

எமது சமூகத்தில் அதிக பண வசதி படைத்தவர்கள் வாழ்ந்து வரும் சூழலில் இவ்வாறு திருமணம் செய்ய முடியாதவர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திய தம்பதியினருக்குப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

# இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு– அமைச்சர் பிரசன்ன குணசேன எச்சரிக்கை!

இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்தை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் இரண்டிற்கும் ஒருங்கிணைந்த பேருந்து நேர அட்டவணையை அமல்படுத்த தேசிய போக்குவரத்து ஆணையம் (NTC) எடுத்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்கள் நேற்று (27) நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இது குறித்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவிக்கையில்,

அரச மற்றும் தனியார் பேருந்துகள் இரண்டிற்கும் ஒருங்கிணைந்த பேருந்து நேர அட்டவணை என்பது புதிய கருத்து அல்ல என்றும், சில மாகாணங்களில் இந்த திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நேர அட்டவணை தற்போது தென் மாகாணத்தில் செயல்பாட்டில் உள்ளதாகவும், அண்மையில் புத்தளம் (யு5) வழித்தடத்திற்கு நீட்டிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருங்கிணைந்த பேருந்து நேர அட்டவணையை செயல்படுத்துவது இலங்கை போக்குவரத்து சேவையை பலவீனப்படுத்தாது என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் செயல்பாடுகளை வலுப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நிதி ஒதுக்கியுள்ளதாகவும், வரவிருக்கும் வரவுசெலவு திட்டத்தில் மேலும் ஒதுக்கீடுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்தாலும், அது வெற்றிபெறாது எனவும், 90 சதவீத பேருந்துகளை இயக்க அமைச்சகம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். பேருந்து செயல்பாடுகளை வலுக்கட்டாயமாக நாசப்படுத்தவோ அல்லது சீர்குலைக்கவோ முயற்சிப்பவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். தொழிற்சங்க நடவடிக்கையால் பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் கேட்டுக்கொல்லப்பட்டுள்ளது. மேலும் போக்குவரத்து சேவைகள் இடையூறுகள் இல்லாமல் தொடரும் என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 6 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இந்தோனேசியாவில் வைத்து கைது!

கொழும்பு, ஓக. 28

இலங்கையில் இடம்பெற்ற பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 6 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்தத் தகவலை இன்று காலை உறுதிப்படுத்தியுள்ளார்.

கெஹெல்பத்தார பத்மே, கொமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் குழு உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றார்.

இலங்கைப் பொலிஸார் மற்றும் சர்வதேசப் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின் பிரகாரம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பிரதான குற்றவாளியான கெஹெல்பத்தார பத்மே, மலேசியாவில் இருந்து தப்பிச் சென்று இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பதுங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த 6 பேர் மீதும் கொலை, போதைப்பொருள் கடத்தல், கொள்ளை உள்ளிட்ட பல தீவிர குற்றங்கள் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற பல குற்றச் செயல்களை இவர்கள் வெளிநாடுகளில் பதுங்கி இருந்து வழிநடத்தியுள்ளனர் எனக் கடந்த காலங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவர்களில் பெண் தவிர ஏனைய ஐவரும் சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுள்ள 6 பாதாள உலகக்குழு உறுப்பினர்களையும் ஓரிரு நாட்களில் இலங்கைக்குக் கொண்டு வருவதற்குரிய பேச்சு இடம்பெற்று வருகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அவர்கள் இங்கு வந்த பின்னர் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# ரணில் தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில்!

## வைத்தியர் ருக்ஷான் பெல்லன தகவல்

கொழும்பு, ஓக. 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன இந்தத் தகவலை இன்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதும், தொடர்ந்து சிகிச்சை பெறுவதும் அவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் முடிவைப் பொறுத்தே உள்ளது.

எவ்வாறிருப்பினும், ரணில் விக்கிரமசிங்கவை வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றுவது குறித்து வைத்தியர்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை." - என்றார்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk